1987 மார்ச் 1]

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாக வசதி கருதி மாவட்டங்களைப் பிரிக்கிற போது அதில் உள்ளடங்கிய பெரிய வட்டங்களையும் பிரிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாவட்டங்களைப் பிரிக்கிறபோது புதிய கோட்டங்கள், புதிய வட்டங்கள் அமைக்கிற கருத்தையும் மனதில் கொண்டுதான் அதைப் பிரிக்கிற பணியில் ஈடுபட்டிருக்கின்ற அதிகாரிகளும், அலுவலாளர்களும் செயல்படுகிறார்கள்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா எந்தவிதமான வளர்ச்சியும் பெறாமல் அங்கே தாலுக்கா அலுவலகம் மட்டும் இருக்கிறது. இப்படி இரண்டு மூன்று அரசுத் துறையினுடைய நிறுவனங்கள் மட்டும்தான் அங்கே இருக்கின்றனவே தவிர வேறு எந்தவிதமான வசதியும் இல்லை. எனவே அதனை நல்லதொரு சிறப்புக் குரிய தாலுக்காவாக உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதனை சிறப்புக்குரியதாக ஆக்குவதற்கு என்னென்ன வேண்டும், என்னென்ன வசதி, வாய்ப்புக்கள் வேண்டும் என்று கேட்பார்களேயானால், என்னென்ன இருக்கிறது, என்னென்ன முடியும், என்னென்ன இயலும் என்று நான் சொல்லலாம். பொதுப்படையாக சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் சிறப்பாக இருக்க வேண்டுமென்று நானும் வாழ்த்துகிறேன். (சிரிப்பு)

கன்னியாகுமரி மாவட்டத்தில் அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை.

103—(*வினா எண் 12343)—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அன்னாசி பழம் பதனிடும் தொழிற்சாலை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச்

சங்கம் 1974 ஆம் ஆண்டு முதல் பழம் பதனிடும் அலகு ஒன்றை நிறுவி நடத்தி வருகிறது. இவ்வலகில் அன்னாசி மற்றும் மாம் பழம் ஆகிய பழவகைகள் பதனிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அன்னாசிப் பழம் பதனிட தனியாகத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்கி வரும் கல்குளம் தாலுக்காவில் துவங்கப்பட்டிருக்கிற கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்சாலையை விரிவுபடுத்தி, உற்பத்தியை அதிகமாக்கி இந்தியாவின் எல்லாப்பகுதிகளுக்கும் பதனிடப்பட்ட பழம் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு 120 மெட்ரிக் டன் திறன் கொண்ட பழம் பதனிடும் ஆலை அங்கே நிறுவப் பட்டது. அதனுடைய உற்பத்தித் திறனை விரிவுபடுத்துவதற்கு ஏதுவாக ரூ. 5.60 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டி ருக்கிறது. 1983–84 ஆம் ஆண்டு அதனுடைய உற்பத்தி அளவு 76 டன்னாக இருந்தது. அதனுடைய உற்பத்தி மதிப்பு ரூ. 6.54 இலட்சம். அதனுடைய விற்பனை மதிப்பு ரூ. 3.13 இலட்சமாக இருந்தது. 1984–85-ல் அதனுடைய உற்பத்தி அளவு 39 டன் உற்பத்தி மதிப்பு ரூ. 3.61 இலட்சம். அதனுடைய விற்பனை அளவு ரூ. 6.92 இலட்சம். 1985–86-ல் அதனுடைய உற்பத்தி அளவு 77 டன், அதனுடைய உற்பத்தி மதிப்பு ரூ. 7.39 இலட்சம் விற்பனை அளவு ரூ. 6·20 இலட்சம். அதை மேலும் பெருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அதற்கான வாய்ப்பு இருக்குமானால், அதை மேலும் மேலும் வளர்ப்பதற்கு அரசு ஆயத்தம் செய்யும்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு தாலுகாவிலிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அன்னாசிப் பழத்தை வாங்கி பதப்படுத்து கிறார்கள். அது வேறு ஒன்றோடு சேர்ந்திருக்கிறது; தனியாக இல்லை. எனவே, தனியாகவே அன்னாசிப் பழம் பதப்படுத்து கின்ற தொழிற்சாலையை அரசு சார்பில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாமல் தொடங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன். அப்படித் தனியாகத் தொடங்கினால் வேலை வாய்ப்பு கள் கூட அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே, அரசே தனியாக, அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 11]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, தனியாக அரசின் சார்பாக பழம் பதனிடும் ஆலை அமைக்கும் உத்தேசம் இல்லை. இப்பொழுது ஓரளவுக்கு இலாபத்திலே பணியாற்றி வருகிறது. அதன்மூலம் உற்பத்தியாகின்ற சாறு தமிழகத்தினுடைய பல்வேறு பண்டக சாலைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது என்பதோடு மட்டுமல்லாமல், பக்கத்து மாநிலங்களுக்கும் செல்லுகிற அளவுக்கும் இருந்து வருகிறது. அதை மேலும் வளர்ப்பதற்கும் விரிவாக்கம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்குமானால் அதற்கு உதவி செய்வதற்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக அரசு ஆய்வு செய்யும்.

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு வீடுகள்.

104—(*வினா எண் 5397) —**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மாநகராட்சிக்குச் சொந்தமான காலி இடங்களில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்குக் குடியிருப்பதற்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குக் கீழ்க்கண்ட மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன :

1. செனாய் நகர்ப் பகுதியில் 75 மனை அளவு கொண்ட பரப்பு.

2. தாம்பரம் அருகில் மாடம்பாக்கம் கிராமத்தில் தொழுநோய் மருத்துவமனை அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 30.25 ஏக்கர் பரப்புடைய இடம்.

3. பல்லாவரம் அருகில் உள்ள பம்மல் கிராமத்தில் தங்கும் விடுதிகள் கட்டப்படுவதற்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்ட 6.44 ஏக்கர் பரப்புடைய இடம்.

செனாய் நகர்ப்பகுதியில் உள்ள மனையில், அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதர இரண்டு இடங்களும் அன்பளிப்பாகப் பெற்றவையாகையால் அவற்றில் மாநகராட்சி அலுவலர்களுக்கு என வீடுகள் கட்டுவதில் சட்டப் பிரச்னைகள் உள்ளன. எனவே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS